செய்தி வெளியீடு எண்:44 நாள்:22.01.2021

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (22.1.2021) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட் சார்பில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், இராணித்தோட்டத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஓட்டுநர் பயிற்சி தளத்தை திறந்து வைத்தார்கள். மேலும், போக்குவரத்துத் துறையின் கீழ் இயங்கும் மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை சார்பில் சென்னை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள அரசு தானியங்கிப் பணிமனைகளின் பயன்பாட்டிற்காக 15 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வாகனங்களின் மின்னணு பழுதுகளை கண்டறிவதற்கான நவீன ரக உயர் தொழில்நுட்ப கருவிகளின் பயன்பாட்டையும் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற வகையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் தமிழ்நாடு மட்டுமின்றி அண்டை மாநிலங்களுக்கும் பேருந்துகளை இயக்குதல், புதிய பேருந்துகள் மற்றும் வழித்தடங்களை துவக்கி வைத்தல், புதிய பணிமனைகள், பேருந்து நிலையங்கள், அலுவலகங்கள் போன்ற கட்டடங்களை கட்டுதல், இணையதளத்தின் வாயிலாக முன்பதிவு வசதி, பள்ளி மாணவர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள், சென்னை மாநகரில் மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட் சார்பில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், இராணித்தோட்டத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2.77 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள ஓட்டுநர் பயிற்சி தளத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். இப்புதிய ஓட்டுநர் பயிற்சி தளம் (Driving Range) மூலம், கன்னியாகுமரி மாவட்டத்தின் சுற்றுவட்டாரப் பகுதியிலுள்ள அரசு போக்குவரத்துக்

கழக பேருந்து ஓட்டுநர்களுக்கும், இதர தனியார் வாகன ஓட்டுநர்களுக்கும் தரமான ஓட்டுநர் பயிற்சி வழங்கவும், விபத்து ஏற்படுத்திய ஓட்டுநர்களுக்கு சிறப்பு புத்தாக்க பயிற்சி அளித்து மேற்கொண்டு எவ்வித விபத்தும் ஏற்படாதவாறு அவர்களின் ஓட்டுநர் திறனை மேம்படுத்திடவும் வழிவகை ஏற்படும்.

மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் சார்பில் சென்னை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள அரசு தானியங்கிப் பணிமனைகளின் பயன்பாட்டிற்காக 15 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அரசு இலகுரக வாகனங்களின் மின்னணு பழுதுகளை கண்டறிவதற்கான நவீன ரக உயர் தொழில்நுட்ப கருவிகளின் (Diagnostic Tools) பயன்பாட்டினை துவக்கி வைக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று மின்னணு பழுதுகளை கண்டறிவதற்கான கருவிகளை வேளச்சேரி – அரசு மத்திய தானியங்கி பணிமனை பொது மேலாளர் மற்றும் மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநர் ஆகியோரிடம் வழங்கினார்கள். இதன்மூலம், நவீன ரக உயர் தொழில்நுட்ப வாகனங்களில் ஏற்படும் மின்னணு பழுதுகளை வாகன தயாரிப்பாளர்களின் டீலர் பணிமனைகளுக்கு நிகராக மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் அரசு தானியங்கிப் பணிமனைகளிலேயே கண்டறிய இயலும். மேலும், அரசு வாகனங்களை தனியார் பணிமனைகளுக்கு அனுப்பி பழுதுகள் ஆய்வு செய்வதற்கான கால விரயமும், பழுது நீக்குவதற்கான செலவும் தவிர்க்கப்படும். அத்துடன், அரசு வாகனங்களில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் ஆய்வு செய்து நிவர்த்தி செய்யப்படுவதால் பெரும்பழுதுகள் ஏற்படுவதும் தவிர்க்கப்படும்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலக்கட்டங்களில் ஓய்வு பெற்ற 4442 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வூதிய பணப் பயன்களின் நிலுவைத் தொகையான 972 கோடியே 43 லட்சம் ரூபாயை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று 9 ஓய்வு பெற்ற போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு ஓய்வூதிய பணப் பயன்களின் நிலுவைத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எம். ஆர். விஜயபாஸ்கர், புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு.என். தளவாய் சுந்தரம், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை செயலாளர் திரு.சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் மேலாண் இயக்குநர் திரு. கே. இளங்கோவன், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநர் திரு. கே. செந்தில்வேல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**